பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 மார்கழி 24 சனிக்கிழமை 08.01.2022 கதிர் 292

## பூஸ்டர் தடுப்பூசியும் கட்டாயமாக்கப்படும்



பொது இடங்களுக்குச் செல்வதற்கு பூஸ்டர் தடுப்பூசி கட்டாயமாக்கப்படும் என்று சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

சுகாதார அமைச்சில் நடைபெற்ற கூட்டமொன்றில் அவர் ☞2

# இந்த அரசுக்குக் 'குட் பாய்' புதிய ஆட்சிக்கு நாம் 'ரெடி'!

## மைத்திரி அதிரடி அறிவிப்பு



**நாட்டில் தற்போது ஆட்சியிலிருக்கும் அரசுக்கு விடை கொடுத்துவிடுத்து புதிய ஆட்சியமைக்க நாம் எந்த நேரமும் தயாராகவே இருக்கின்றோம்.**

**- இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.**

**குருநாகலில் நடைபெற்ற கட்சிக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.** ☞2

## மன வருத்தம் அடைந்த டில்லியின் தாக்குதலை எதிர்கொள்ளத் தயார்

### எரிசக்தி அமைச்சர் கம்மன்பில அதிரடி

திருகோணமலை எண்ணெய்க் குதங்களை மீளப் பெற்றுக்கொண்டமையால், இந்தியா மனவருத்தம் அடைந்துள்ளது என எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

இதன் காரணமாக இந்தியாவின் உளவாளிகளும் சகாக்களும் தன்னைத் தாக்குகின்றனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும், இந்தியாவின் தாக்குதலை எதிர்கொள்ளத் தாம் தயாராகவே இருக்கின்றார் எனவும் அவர் மேலும் கூறினார்.



## ரணிலின் அரசியல் நகர்வு குறித்து கழுகுப் பார்வை!



ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரான முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் சில அரசியல் நகர்வுகளானவை தெற்கு அரசியல் களத்தில் - அரசியல் பிரமுகர்கள் மத்தியில்ஒருவிதஅச்சஉணர்வை ஏற்படுத்தியுள்ளது. அதேபோல் ரணில் விக்கிரமசிங்கவின் நகர்வுகள் தொடர்பில் வெளிநாட்டு இராஜாதந்திரிகளும், உள்நாட்டு அரசியல் நிபுணர்களும் உன்னிப்பாக அவதானித்து வருகின்றனர்.

கடந்த பொதுத்தேர்தலில் ஐ.தே.கவுக்கு ☞2

## ஒப்பந்தம் 18ஆம் திகதி சபையில் முன்வைப்பு

திருகோணமலை எண்ணெய் குதங்கள் தொடர்பில் கைச்சாத்திடப்பட்டுள்ள புதிய உடன்படிக்கை எதிர்வரும் 18ஆம் திகதி நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படும் என்று எரிசக்தி அமைச்சர் ☞2

## கோட்டாபயவின் தலைமையில் 74 ஆவது சுதந்திர தின நிகழ்வு

### அணிவகுப்பில் 6,783 படையினர் பங்கேற்பு

இலங்கையின் 74ஆவது சுதந்திர தினம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமையில் எதிர்வரும் பெப்ரவரி 04 ஆம் திகதி சுதந்திர சதுக்கத்தில் நடைபெறவுள்ளது.

அமைச்சர்கள், கட்சித்தலைவர்கள், முக்கியஸ்தர்கள் உட்பட அனைத்து நாடுகளின் இராஜதந்திரிகள் இம்முறை சுதந்திர தின நிகழ்வில் கலந்துகொள்ளவுள்ளமையுடன் அவர்களுக்கான அழைப்பு ☞2

## எண்ணெய்க் குதங்கள் ஒப்பந்தம்: உடனே இரத்துச் செய்ய வேண்டும்

### ஜனாதிபதி செயலகத்துக்கு முன் ஆர்ப்பாட்டம்; உயர்நீதிமன்றத்திலும் அடிப்படை உரிமை மனு



திருகோணமலை எண்ணெய்க் குதங்கள் தொடர்பான ஒப்பந்தத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் நேற்று ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டது.

இதனிடையே, திருகோணமலை எண்ணெய்க் குதங்களை அபிவிருத்திச் செய்வதற்காக இந்திய நிறுவனமொன்றுக்கு வழங்கும் வகையில் கைச்சாத்திடப்பட்ட உடனபடிக்கையுடன் தொடர்புடைய அமைச்சரவை தீர்மானத்தை செல்லுபடியற்றதாக்குமாறு கோரி உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனு நேற்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ☞2

## வடக்கு, கிழக்கு மக்களின் கோரிக்கைக்கு இ.தொ.கா. ஒருபோதும் எதிராக நிற்காது!

### முன்னாள் எம்.பி. சென்னன் தெரிவிப்பு

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், வடக்கு கிழக்கு மக்களின் கோரிக்கைகளுக்கு எதிரான கட்சி கிடையாது. தனி நாட்டுக் கோரிக்கையை ஏற்க மறுத்தே அன்று சௌமியமூர்த்தி தொண்டமான் வெளியேறினார் என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உதவிச்செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ரி.வி.சென்னன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

இந்திய வம்சாவளி மக்கள் மலையகத்தில் மாத்திரமின்றி ☞2

## உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலையின் நினைவேந்தல்

### திங்களன்று யாழ். முற்றவெளி மைதானத்தில்



(இ.கலையமுதன்)

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற 4ஆவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் கொல்லப்பட்டவர்களின் 48 ஆவது நினைவு தினம் நாளைமறுதினம் திங்கட்கிழமை காலை 9.30 மணியளவில் அனுஷ்டிக்கப்படவுள்ளது. ☞2

## கோட்டாபயவின் தலைமையில் ............

(முதலம் பக்கத் தொடர்ச்சி)

விடுக்கப்பட்டுள்ளது எனவும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் என். எச்.எம். சித்ரானந்த தெரிவித்தார்.

சுதந்திர தின நிகழ்வுகளுக்கான ஏற்பாடுகள் தொடர்பில் தெளிவுபடுத்தும் விசேட கலந்துரையாடல் நேற்று கொழும்பு மாவட்ட செயலக கட்டடத்திலுள்ள உள்நாட்டலுவல்கள் அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அமைச்சின் மேலதிக செயலாளர் கே.ஜீ. தர்மதிலக்க உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் பலர் கலந்துகொண்டு சுதந்திரதினவிழாவுக்கானஏற்பாடுகளை தெளிவுபடுத்தினர்.

சுதந்திர தின விழாவையொட்டி சமய வழிபாடுகள் அன்றைய தினம் காலை 6.30 மணியளவில் நடைபெறவுள்ளன. பௌத்த மத நிகழ்வு நாரஹேன்பிட்டியிலுள்ள அபேயாராம விஹாரையில் நடைபெறவுள்ளதுடன் முக்கிய அமைச்சர்கள் பலரும் அதில் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்து சமய மத நிகழ்வுகள் பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் அன்றையதினம் காலை 6.30 மணிக்கு நடைபெறவுள்ளதுடன் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான், நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவர் அங்கஜன் இராமநாதன் எம்.பி. ஆகியோரும் அந்த நிகழ்வில் கலந்துகொள்ளவுள்ளனர்.

முஸ்லிம் சமய மத வழிபாடுகள் கொழும்பு - 12 பெரிய பள்ளியில் நடைபெறவுள்ளதுடன் நீதி அமைச்சர் அலி சப்ரி உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் அந்த நிகழ்வில் கலந்துகொள்ளவுள்ளனர்.

கத்தோலிக்க சமய மத வழிபாடு புஞ்சிப்பொரளையிலுள்ள அனைத்து புனிதர்களின் ஆலயத்தில்நடைபெறவுள்ளது. இராஜாங்க அமைச்சர்களான இந்திக்க அநுரத்த, திருமதி சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே ஆகியோர் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் அதில் கலந்துகொள்ளவுள்ளனர்.

கிறிஸ்தவ வழிபாட்டு நிகழ்வு கொழும்பு - 02 இல் உள்ள இரட்சணிய சேனை ஆலயத்தில் நடைபெறவுள்ளது எனவும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் கூறினார்.

இம்முறை சுதந்திர தின நிகழ்வுகள் நாட்டில் நடைமுறையிலுள்ள சுகாதார வழிகாட்டல்களுக்கமையநடைபெறவுள்ளன. நிகழ்வு நடைபெறும் சுதந்திர சதுக்கத்தையொட்டிய பிரதேசங்கள் பலத்த பாதுகாப்பு ஏற்படுத்தப்படுவதுடன் நிகழ்வில் பங்குபற்றுவோருக்கான பொது வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

சுதந்திர தின நிகழ்வுகளின் முக்கிய அம்சமான முப்படையினரின் அணிவகுப்பில் இம்முறை 6 ஆயிரத்து 783 பேர் பங்குபற்றவுள்ளனர்.

எதிர்வரும் 29ஆம் திகதி முதல் ஒத்திகைநடவடிக்கைகள்இடம்பெறுவதுடன் ஒத்திகை நேரம் தவிர்ந்த ஏனைய காலங்களில் பொதுமக்களுக்கு அசௌகரியம் ஏற்படாத வகையில் வீதிகளைத் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பெப்ரவரி 4ஆம் திகதி நடைபெறும் நிகழ்வில் தேசிய கீதம் இசைப்பதற்காக 45 பாடசாலை மாணவர்கள் கலந்துகொள்ளவுள்ளனர். விசேட அதிதிகள் மற்றும் முக்கியஸ்தர்களுக்காக ஆசனங்கள் ஒதுக்கப்பட்டுள்ளதுடன் காலை 7.30 மணிக்கு முன்பதாக அனைவரும் ஆசனத்தில் அமர வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இம்முறைசுதந்திரதினநிகழ்வுகளைப் பார்வையிடுவதற்குப் பொதுமக்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை. எனினும், கடந்த வருடங்களைப் போன்று வீதியில் இரு மருங்குகளிலும் இருந்து நிகழ்வுகளைப் பார்வையிடுவதற்கு மக்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது எனவும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் மேலும் குறிப்பிட்டார்.

நேற்றைய இந்த விசேட கலந்துரையாடலில் முப்படைகளின் பிரதானிகள், பொலிஸ் மற்றும் சிவில் பாதுகாப்புப் படை உயர் அதிகாரிகள், ஊடக நிறுவனங்களின் முக்கியஸ்தர்கள், சுதந்திர தின நிகழ்வுகளோடு சம்பந்தப்பட்ட அமைச்சுக்கள், திணைக்களங்கள், அரச நிறுவனங்களின் உயர் அதிகாரிகளும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

## வடக்கு, கிழக்கு .........

(முதலம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையில் அனைத்து பிரதேசங்களிலும்வாழ்ந்துவருகின்றனர். அத்துடன் சிங்கள மக்களுடன் மிகவும் நெருக்கமான உறவையும் பேணி வருவதால் தனிநாட்டு கோரிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாது என்று அக்காலத்திலேயே அக்கூட்டணியில் இருந்து சௌமியமூர்த்தி தொண்டமான் வெளியேறினார். எனவே, தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமான் காட்டிய வழியையே இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அன்று முதல் இன்று வரை கடைப்பிடித்து வருகின்றது.

இன்றைய காலப்பகுதியில் ஒரு சிலர் வடக்கு, கிழக்கு மக்களுடன் இணைந்து இந்தியவம்சாவளிமக்களையும்போராட்ட வழியில் ஈடுபடுத்த முயற்சிப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது - என்றார்.

## உலகத் தமிழாராய்ச்சி .....

(முதலம் பக்கத் தொடர்ச்சி)

அந்த மாநாட்டில் கொல்லப்பட்டவர்களின் நினைவாக யாழ்ப்பாணம், முற்றவெளியில் அமைக்கப்பட்டுள்ள நினைவாலயத்தில் நினைவஞ்சலி நடத்தப்படுவது வழமை.

இதன்போது அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள் ஆகியோரைக் கலந்துகொண்டு அஞ்சலியைச் செலுத்துமாறு ஏற்பாட்டாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

1974ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 3ஆம் திகதி தொடக்கம் 10 ஆம் திகதி வரை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றநான்காவதுஉலகத்தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதிநாள் விருந்துபசார வைபவத்தின்போது வன்முறைக் கும்பலொன்றால் நடத்தப்பட்ட தாக்குதலில் மாநாட்டில் கலந்துகொண்டிருந்த 11 பேர் கொல்லப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## எண்ணெய்க் குதங்கள் ......

(முதலம் பக்கத் தொடர்ச்சி)

தேசிய பிக்குகள் முன்னணியின் செயலாளர் வக்கமுல்ல உதித்த தேரர் சார்பில் சட்டத்தரணி சுனில் வட்டகல இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

வழக்கின் பிரதிவாதிகளாக ஜனாதிபதிக்குப் பதிலாக சட்டமா அதிபர், ஜனாதிபதிசெயலாளர், நிதி அமைச்சர், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், எரிசக்தி அமைச்சர், கணக்காய்வாளர் நாயகம் உள்ளிட்ட 47 பேர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

திருகோணமலை எண்ணெய்க் குதங்களை மூன்று பகுதிகளாகப் பிரித்து அபிவிருத்திசெய்வதற்கானஒப்பந்தத்தில் இந்திய எரிபொருள் நிறுவனம் உள்ளிட்ட தரப்பினர் நேற்றுமுன்தினம்கொழும்பில் கைச்சாத்திட்டனர்.

இந்தியாவின் நிர்வாகத்தின் கீழ் இருந்த 99 எண்ணெய்க் குதங்களில் 85குதங்களின்நிர்வாகம்இலங்கைக்குக் கிடைத்துள்ளமை வரலாற்று சிறப்புமிக்க வெற்றி என எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

ஒப்பந்தத்தின்படி 14 குதங்கள் இந்திய எண்ணெய் நிறுவனத்துக்கும், 24 குதங்கள் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கும், எஞ்சிய 61 குதங்கள் Trinco Petroleum Terminal நிறுவனத்துக்கும் காணியுடன் 50 வருடங்களுக்குக் குத்தகைக்கு வழங்கப்படுகின்றன.

Trinco Petroleum Terminal நிறுவனத்தின் 51 வீத பங்குகள் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கும், 49 வீத பங்குகள் இந்திய எண்ணெய் நிறுவனத்துக்கும் உரித்தாகின்றன.

நேற்றுமுன்தினம் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்தின்படி ஏதாவது ஒரு காரணத்தால் ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டால், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் இந்திய எண்ணெய் நிறுவனத்தால் முன்னெடுத்துச் செலப்படும் குதங்களை வீஷேஷஉலி Petroleum Terminal நிறுவனத்துக்கு வழங்க வேண்டும்.

இந்த நிறுவனங்களுக்கு இடையிலான எந்தவொரு பிணக்கும் சிங்கப்பூரிலுள்ள சர்வதேச மத்தியஸ்த நிலையமொன்றின் ஊடாகத் தீர்க்கப்பட வேண்டும் எனவும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ரணிலின் அரசியல் .........

(முதலம் பக்கத் தொடர்ச்சி)

வரலாறு காணாத தோல்வி ஏற்பட்டது. தேசியப்பட்டியல் மூலம் கிடைத்த வாய்ப்பை பயன்படுத்தி ரணில் விக்கிரமசிங்க சபைக்கு வந்தார். அவ்வாறு வந்த பின்னர் அவர் சபை நடவடிக்கைகளில் அதிரடி காட்டி வருகிறார். இது அனைவர் மத்தியிலும் வரவேற்பை பெற்றுள்ளது.

குறிப்பாக ரணில் விக்கிரமசிங்கவை கடந்த காலங்களில் விமர்சித்த தேரர்கள் கூட தற்போதைய சூழ்நிலையில் ரணிலின் அரசியல் வகிபாகம் அத்தியாவசியம்என்றெல்லாம்சுட்டிக்காட்டுகின்றனர்.

முன்னாள் ஆளுநர்கள் மூவர் அண்மையில் ரணிலைச் சந்தித்து தமது ஆதரவைத் தெரிவித்துள்ளனர். மேலும் பல உறுப்பினர்களும் ரணில் விக்கிரமசிங்கவுடன் பேச்சுகளை நடத்தி வருகின்றனர்.

அதேவேளை, ரணில் விக்கிரமசிங்கவைப் பிதமராக நியமிப்பதற்கான வாய்ப்பும் உள்ளது என்ற தகவலும் அரசியல் களத்தில் தற்போது வேகமாகப் பரவி வருகின்றது. சர்வதேச ஆதரவைக் கருதியே இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது எனக் கூறப்படுகின்றது. அதற்கானசாத்தியம்குறைவுஎனஆளுந்தரப்பு தகவல்கள் கூறுகின்றன.

இதற்கிடையில் 2023இல் ரணில் நிச்சயம்ஆட்சிமாற்றத்தைஏற்படுத்துவார் என்று ஐ.தே.கவின் தவிசாளர் வஜிர அபேவர்தன நம்பிக்கை வெளியிட்டுள்ளார். அதற்கான நகர்வுகள் எப்படி இடம்பெறும் எனவும் கட்சி சகாக்களிடம் அவர் கூறியுள்ளார்.

## இந்த அரசுக்குக் ........

(முதலம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது வருமாறு :-

நாடு மிகவும் மோசமான நிலையை அடைந்துள்ளது. இந்நிலையில், புதிய அரசொன்றை அமைப்பதற்கான வேலைத் திட்டத்தை நாம் முன்னெடுத்து வருகின்றோம்.

இராஜாங்க அமைச்சராக இருந்த சுசில் பிரேமஜயந்தவுக்கு இன்று நடந்தது, நாளை நமக்கும் நடக்கலாம். எதற்கும் நாம் தயாராகவே இருக்கின்றோம்.

அரசை விமர்சிப்பதற்கு எனக்குத் தகுதியில்லை எனவும், நீங்களும் ஜனாதிபதியாக இருந்தவர்தானே எனவும் சிலர் சமூக வலைத்தளங்களில் விமர்சனங்களை முன்வைத்து வருகின்றனர்.

எனது தலைமையில் அமைந்த ஆட்சியானது மாறுபட்டதொன்றாகும். இலங்கை அரசியல் வரலாற்றில் அவ்வாறானதொரு அரசு இன்னும் அமையவில்லை. ஜனநாயகம் பாதுகாக்கப்பட்டது. மனித உரிமைகள் மதிக்கப்பட்டன. தகவல் அறியும் உரிமை உறுதிப்படுத்தப்பட்டது. ஊழல்வாதிகள் தண்டிக்கப்பட்டனர். நீதித்துறையின் சுயாதீனம் பாதுகாக்கப்பட்டது.

இந்த அரசு கொண்டுவந்த அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டம் இல்லாதொழிக்கப்பட்டு மீண்டும் 19ஆவது திருத்தச்சட்டம் கொண்டுவரப்பட வேண்டும். அப்போதுதான் சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்பு நாட்டுக்குக் கிட்டும் -என்றார்.

## பூஸ்டர் தடுப்பூசியும் .......

(முதலம் பக்கத் தொடர்ச்சி)

இந்த விடயத்தைக் கூறியுள்ளார்.

க்யூ.ஆர் (QR Code) கோட் உள்ளடங்கிய புதிய தடுப்பூசி அட்டையும் தடுப்பூசி செயலியும் விரைவில் அறிமுகம் செய்யப்படும்என்றும்அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், அனைத்து உள்ளூராட்சி சபைகளையும்தடுப்பூசிநிலையங்களாக மாற்றுவதற்குத் திட்டமிட்டுள்ளதாகவும், இதன் மூலம் தடுப்பூசி ஏற்றுகையை துரிதப்படுத்த முடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இதுவரையில் நாட்டில் 28 வீதமான வர்கள் பூஸ்டர் தடுப்பூசியை ஏற்றிக் கொண்டுள்ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ஒப்பந்தம் 18ஆம் ......

(முதலம் பக்கத் தொடர்ச்சி)

உதய கம்மன்பில தெரிவித்தார்.

அதற்கு முன்னர் நாளைமறுதினம் திங்கட்கிழமை நடைபெறும் அமைச்சரவைக் கூட்டத்திலும் ஒப்பந்தம் முன் வைக்கப்படவுள்ளது. திருகோணமலை எண்ணெய்க் குதங்கள் தொடர்பில் கைச் சாத்திடப்பட்டுள்ள உடன்படிக்கைக்கு கடும் எதிர்ப்புகள் கிளம்பியுள்ளன. தொழிற்சங் கங்கள் போராட்டத்துக்குத் தயாராகி வரு கின்றன.


Walk-In Interview
Front Office Executive



We are looking for a female Front Office Executive for immediate employment

The ideal candidate must have;
# Poses G.C.E. (A/L) qualification.
# An IT Literate.
# Strong interpersonal and communication skills.
# Excellent English communication skills.
# Excellent telephone etiquettes and knowledge.
# Hands-on experience in Front-Desk operations.
# Certificate/Diploma in Business Administration or similar field will be an added advantage.

Sunday, 09/01/2022
10:00 - 13:00

IIS CITY CAMPUS
441 Clock Tower Road, Jaffna
0212228060 / 0717774666

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# மீண்டும் கியூ யுகம்

மீண்டும் மக்கள் வரிசையில் நிற்கும் கியூ யுகம் யதார்த்தமாகி வருகின்றது. எழுபதுகளில் அதை எதிர்கொண்ட மக்கள் மீண்டும் ஐம்பது வருடங்கள் கழித்து அதே கியூ யுகத்தை எதிர்கொள்ளும் நிலைமைக்குத் தள்ளப்பட்டு இருக்கின்றனர்.

எழுபதுகளின் முற்பகுதியில் பாணுக்குக் கியூவில் நின்றமை போலவே விரைவில் மீண்டும் நாட்டில் பாணுக்குக் கியூ நிற்கும் நிலைமை வருவது தவிர்க்க முடியாதது என்று அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கத் தலைவர் என்.கே.ஜெயவர்தனா கூறியிருக்கின்றார்.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் இப்படி பாணுக்கும் பிற பொருள்களுக்கும் மக்கள் கியூவில் நின்றமைக்கும் இப்போது கியூவில் நிற்கும் நிலைமை ஏற்பட்டமைக்கும் இடையில் நிறையவே வேறுபாடுகளும் சில ஒற்றுமைகளும் உள்ளமை அவதானிக்கத்தக்கது.

அத்தியாவசியப் பொருள்களின் இறக்குமதி தடைப்பட்ட காரணத்தினாலேயே அந்த நிலைமை ஏற்பட்டது என்பது பொதுவான ஒற்றுமை.

ஆனால், அன்று பொருளாதார இறக்குமதி அரசின் கையை மீறித் தடைப்படவில்லை. உள்ளூர் உற்பத்தியை ஊக்குவிப்பதற்காக அரசு தானாகவே பல பொருள்களின் இறக்குமதியைக் கட்டுப்படுத்தத் தீர்மானித்து அதை நடைமுறைப்படுத்தியது. அந்தப் பொருள்களை இறக்குமதி செய்வதற்கான வலிமையும், நிதியும், இயலுமையும் அந்த அரசுக்கு இருந்தன. ஆனால் அரிசி மற்றும் உப உணவுப் பொருள்களின் உள்ளூர் உற்பத்திக்கும் சந்தை வாய்ப்புக்கும் அதிக இடமும் முக்கியத்துவமும் பெற்றுக் கொடுப்பதற்காகக் கோதுமை, அரிசி போன்ற பொருள்களின் இறக்குமதியை அப்போதைய அரசு தானாகத் தடை செய்தது.

அந்த அரசின் அத்தகைய இறுக்கமான கட்டுப்பாடுகள், தடைகளால் உள்ளூர் விவசாயிகள், உற்பத்தியாளர்கள் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்பட்டமை கண்கூடு.

ஆனால் இப்போதைய அரசோ கோதுமை மா உட்பட அத்தியாவசியப் பொருள்களின் இறக்குமதிக்குப் போதிய அந்நிய செலாவணிக் கையிருப்பு இல்லை என்ற இக்கட்டினால் – நெருக்கடியினால் – அவற்றை இறக்குமதி செய்ய முடியாத கையாலாகாத்தனத்தால் – அதைச் செய்ய முடியாமல் பதுங்குகின்றது.

இதனால், இவற்றை ஒட்டிய உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்று பார்த்தால் அதுவும் நடக்கவில்லை. அதுவும் நடக்கவில்லை என்பதற்கு மாறாக, அதற்கு மாறான – தலைகீழான – நடவடிக்கைகள் இந்த அரசினால் மேற்கொள்ளப்பட்டு, நிலைமை இன்னும் மோசமடைய செய்யப்பட்டிருக்கின்றது.

உண்மையில் அந்நிய செலாவணிக் கையிருப்புக் கரைந்து, அத்தியாவசியப் பொருள்களின் இறக்குமதி கூட முற்றாகத் தடைப்படும் என்பது மூன்று, நான்கு மாதங்களுக்கு முன்னரே உறுதியாகிவிட்டது. அப்போதே இந்தப் பொருள்களின் உற்பத்தியை ஊக்குவிக்க ஆவன செய்திருந்தால் இன்றைய நிலைமையை ஓரளவுக்கு முகம் கொடுத்து சமாளித்திருக்கலாம். அதற்குப் பதிலாக, சேதனப் பசளைகளுக்குக் கட்டுப்பாடு, இரசாயனக் களைகொல்லிகளின் இறக்குமதிக்குத் தடை என்றெல்லாம் அதே சமயம் பார்த்து, உள்ளூர் உற்பத்தியையும் முடக்கும் முட்டாள்தனமாக முடிவுகளை அறிவித்து, நிலைமையை இன்னும் மோசமடைய செய்திருக்கின்றது அறிவிலிப் போக்குடைய இந்த அரசு. அன்று முப்பத்தி யேழு சதத்துக்கு ஒரு றாத்தல் பாண் விற்றபோது மக்கள் கியூவில் நின்றமைக்கான காரணமும் நோக்கமும் வேறு.

இன்று அதே பாண் இறாத்தல் 80 ரூபாவுக்கு விற்கப்படும்போது, மக்கள் அதைப் பெறுவதற்கு கியூவில் நிற்கும் கட்டாயம் உருவானமைக்கு காரணம்.

இரண்டும் வித்தியாசமான தளங்களில் கட்டவிழ்ந்தவை என்பதுதான் முக்கியம்.

# தனித்து போட்டியிட்டு வெற்றிபெறும் பலம் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்கு உள்ளது

## தயாசிறி உறுதி



பிரதேசசபைத் தேர்தலானாலும், மாகாண சபைத் தேர்தலானாலும் தனித்து போட்டியிட்டு வெற்றிபெறும் பலம் சுதந்திரக் கட்சிக்கு உண்டு என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும் இராஜாங்க அமைச்சருமான தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

மாத்தளை மாவட்டத்தில் நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தொகுதி அமைப்பாளர்களுக்கான கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறியவை வருமாறு –

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை வெற்றி பெறச் செய்வதற்கு நாம் தானாகச் சென்று கூட்டணியமைக்கவில்லை. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் ஒப்பந்தத்தை கையெழுத்திட்டு, நிபந்தனைகளுடனேயே அவர்களுடன் இணைந்து கூட்டணியமைத்தோம்.

எனவே, அரசாங்கம் ஏதேனும் தவறிழைக்குமாயின் அதனை சுட்டிக்காட்டக் கூடிய உரிமை எமக்கிருக்கிறது. காரணம் நாம் இந்த ஆட்சியை அமைப்பதற்கு பாடுபட்டவர்களாவோம். சுபீட்சத்தின் நோக்கு கொள்கை திட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள வேலைத்திட்டங்களுக்கு அமையவே நாம் ஜனாதிபதிக்கு ஆதரவளித்தோம்.

இன்று செய்யும் முட்டாள் தனமான செயற்பாடுகள் சுபீட்சத்தின் நோக்கு கொள்கை பிரகடனத்தில் இல்லை. அரசாங்கத்தின் குறைபாடுகளை சுட்டிக்காட்டுவதற்கு காணப்படும் உரிமையை நாம் பயன்படுத்த வேண்டும். சரியான வேலைத்திட்டங்களுடனேயே நாம் தீர்மானங்களை எடுப்போம். அதற்கு நாம் அஞ்சப் போவதில்லை.

நாம் யாருடைய அழுத்தத்தின் காரணமாகவும் அரசாங்கத்துடன் இணைந்திருக்கவில்லை. எமக்கு வாக்களித்த மக்களுக்கு நாம் பொறுப்புக் கூற வேண்டும்.

நாம் கிராம மட்டங்களுக்குச் சென்று வேலைத்திட்டங்களை முன்னெடுத்தால் அங்குள்ள முற்போக்கு சக்திகள் எம்முடன் இணையும். அதற்கமைய அவ்வாறான அமைப்புக்களுடன் எமது தலைமைத்துவத்தின் கீழ் நாம் பலமானதொரு கூட்டணியை அமைப்போம்.

அதற்கமைய எதிர்காலத்தில் கூட்டணி அரசாங்கம் அமைந்தாலும் அது ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தலைமைத்துவத்தின் கீழேயே அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எனவே, எவ்வித அச்சமும் இன்றி நிலைப்பாடுகளை வெளிப்படுத்துங்கள். அரசாங்கத்திலிருந்து வெளியேறுமாறு கூறினால், இன்றே அந்த சவாலை ஏற்று விலகத்தயார். பிரதேசசபைத் தேர்தலானாலும், மாகாணசபைத் தேர்தலானாலும் தனித்து போட்டியிட்டு வெற்றிபெறும் பலம் சுதந்திரக் கட்சிக்கு உண்டு. – என்றார்.

# பொது இடங்களுக்குச் செல்லும் மக்களுக்கு சுகாதார அமைச்சு விடுத்துள்ள அறிவித்தல்!

பொது இடங்களுக்குச் செல்வதற்கு பூஸ்டர் தடுப்பூசி கட்டாயமாக்கப்படும் என சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

சுகாதார அமைச்சில் நடைபெற்ற கூட்டமொன்றில் அவர் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

கியூ.ஆர். கோட் உள்ளடங்கிய புதிய தடுப்பூசி அட்டையும் தடுப்பூசி செயலியும் விரைவில் அறிமுகம் செய்யப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், அனைத்து உள்ளூராட்சி மன்றங்களையும் தடுப்பூசி நிலையங்களாக மாற்றுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளன எனவும், இதன் மூலம் தடுப்பூசி ஏற்றுகையை துரிதப்படுத்த முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதுவரையில் நாட்டில் 28 வீதமானவர்கள் பூஸ்டர் தடுப்பூசியை ஏற்றிக்கொண்டுள்ளனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# எரிவாயு சிலிண்டர் கொள்வனவுக்கு யாழில் மக்கள் நீண்ட வரிசையில்!



யாழ்ப்பாண நகரில் எரிவாயு சிலிண்டர்களைக் கொள்வனவு செய்வதற்காக மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்தனர். நேற்று (வெள்ளிக்கிழமை) காலை முதல் யாழ்ப்பாணம் – வைத்தியசாலை வீதியிலுள்ள கொட்டிபகுதியில் அமைந்துள்ள எரிவாயு சிலிண்டர் களஞ்சியசாலைக்கு முன்பாக எரிவாயு சிலிண்டர்களுடன் மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்தனர். இதன்போது, முதல் வருகை தரும் 300 பேர்களுக்கு மட்டும் எரிவாயு சிலிண்டர் வழங்கப்படும் எனும் பதாதை காட்சிப்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# போராட்டக்காரர்களை கண்டவுடன் சுட கஜகஸ்தானில் ஜனாதிபதி உத்தரவு!



கஜகஸ்தானில் எரிபொருள் விலை அதிகரிப்புக்கு எதிராக ஆரம்பித்த பெரும் மக்கள் போராட்டம் அரசுக்கு எதிரான போராட்டமாக தொடர்ந்து வலுவடைந்து வரும் நிலையில் போராட்டக்காரர்களை முன்னெச்சரிக்கையின்றி கண்டவுடன் சுட கஜகஸ்தான் ஜனாதிபதி காசிம் ஜோமார்ட் டோக்காயேவ் உத்தரவிட்டுள்ளார்.

இதனையடுத்து போராட்டக்காரர்கள் மீது பாதுகாப்பு படையினர் கண்மூடித்தனமான துப்பாக்கிச்சூடு நடத்தி வருகின்றனர்.

கஜகஸ்தானில் இடம்பெறும் வன்முறைகளால் இதுவரை பாதுகாப்பு படையினர் 18 பேரும், போராட்டக்காரர்களில் 26 பேரும் உயிரிழந்தன என கஜகஸ்தான் உள்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

போராட்டம் தொடர்ந்து நடைபெற்று வருவதால் பலி எண்ணிக்கை அதிகரிக்கலாம் என்ற அச்சம் எழுந்துள்ளது.

இதேவேளை, கலவரத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர். அவர்களில் பலர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்நிலையில் எரிபொருள் விலையேற்றத்தை எதிர்த்து நடைபெற்ற போராட்டங்களின் போது தலைநகர் அல்மாட்டியின் முக்கிய நகரத்தை 20,000 கொள்ளையர்கள் தாக்கி சூறையிட்டதாக ஜனாதிபதி காசிம் ஜோமார்ட் டோக்காயேவ் கூறினார்.

அவர்களில் பலர் வெளிநாட்டில் பயிற்சி பெற்ற பயங்கரவாதிகள் என எந்த ஆதாரங்களும் இன்றி அவா குற்றஞ்சாட்டினார்.

அரச தொலைக்காட்சியில் பேசிய ஜனாதிபதி டோக்காயேவ் போராட்டக்காரர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவது முட்டாள்தனம் என்று அவர் நிராகரித்தார். குற்றவாளிகள் மற்றும் கொலைகாரர்களுடன் நாம் எப்படி பேச்சு நடத்த முடியும்? என அவா கேள்வி எழுப்பினார்.

நாங்கள் ஆயுதம் ஏந்திய மற்றும் நன்கு தயார்படுத்தப்பட்ட உள்ளூர் மற்றும் வெளிநாட்டுக் கொள்ளையர்களை சமாளிக்க வேண்டியுள்ளது. இன்னும் தெளிவாகக் கூறினால் நாம் பயங்கரவாதிகளுடன் போரிட வேண்டியுள்ளது. அவாகளுடன் பேச்சுவார்த்தை சாத்தியம் இல்லை. நாம் அவர்களை அழிக்க வேண்டும். இது விரைவில் நடக்கும் எனவும் டோக்காயேவ் தெரிவித்தார்.

எனினும் அரச எதிர்ப்பு போராட்டக்காரர்களை பயங்கரவாதிகள் என ஜனாதிபதி விமர்சித்துள்ளதை கஜகஸ்தான் எதிர்க்கட்சிகள் நிராகரித்துள்ளன. மக்கள் போராட்டத்தை ஜனாதிபதி பயங்கரவாதமாக சித்தரிப்பதாகவும் எதிர்க்கட்சியினர் தெரிவித்துள்ளனர். இதற்கிடையில் கஜகஸ்தானில் போராட்டங்களைக் கட்டுப்படுத்த உதவுமாறு ஜனாதிபதி காசிம் ஜோமார்ட் டோக்காயேவ் விடுத்த அழைப்பை ஏற்று ரஷியாவில் இருந்து அமைதிப் படை களமிறக்கப்பட்டுள்ளது.

கஜகஸ்தானில் எரிபொருள் விலை அதிகரிப்புக்கு எதிராக நாடு முழுவதும் மக்கள் திரண்டதால் வேறு வழியின்றி பிரதமர் அஸ்கர் மாமின் தலைமையிலான அரசு ராஜினாமா செய்துள்ளது. இந்த ராஜினாமாவை கஜகஸ்தான் ஜனாதிபதி காசிம் ஜோமார்ட் டோக்காயேவ் ஏற்றுக் கொண்டார்.

இதையடுத்து அந்த நாட்டில் அவசர நிலை பிரகடனப் படுத்தப்பட்டது. மக்கள் நடமாட தடை விதிக்கப்பட்டுள்ளது. மேலும் எரிவாயு விலையை கட்டுப்படுத்துமாறு மாகாண ஆளுநர்களுக்கு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# இம்ரான்கான் நிதியுதவி கோரி சீனாவுக்கு பயணம்



இம்ரான்கானின் சீனா பயணம் இருநாட்டுவர்த்தக இணைப்புகளையும் பொருளாதார வாய்ப்புகளையும் உருவாக்கும் என செனட் தலைவர் சாதிக் சஞ்சராணி தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானில் பிரதமர் இம்ரான்கான் தலைமையிலான ஆட்சி நடந்து வருகிறது. இந்த நாடு தற்போது கடும் நிதி நெருக் கடியில் சிக்கி தவிக்கிறது.

பாகிஸ்தானும் சீனாவும் நட்புறவு நாடுகளாக திகழ்ந்து வருகின்றன. இதனால் நிதி நெருக்கடியை சமாளிக்க சீனாவிடம் நிதி கேட்க இம்ரான்கான் முடிவு செய்துள்ளார்.

இதையடுத்து அவர் அடுத்த மாதம் ஆரம்பத்தில் சீனா செல்ல திட்டமிட்டுள்ளர் என உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இரு நாடுகளின் உறவுகளை மேலும் வலுப்படுத்தவும் பல்வேறு திட்டங்களில் அதிக முதலீடுகளைப் பெரும் வகையில் சீனா நாட்டுடன் பல்வேறு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளவும் அவர் இந்த பயணத்தை மேற்கொள்ள இருக்கிறார்.

இம்ரான்கானின் சீனா பயணத்தை அந்நாடு வரவேற்றுள்ளது. இது குறித்து பாகிஸ்தானில் செனட் தலைவர் சாதிக் சஞ்சராணி கூறும் போது, இம்ரான்கானின் சீனா பயணம் இரு நாட்டு வர்த்தக இணைப்புகளையும் பொருளாதார வாய்ப்புகளையும் உருவாக்கும் என தெரிவித்துள்ளார்.

பண நெருக்கடியில் சிக்கி தவிக்கும் பாகிஸ்தானுக்கு நிதி உதவி வழங்க சீனாவும் ஒப்புக் கொண்டுள்ளது. இம்ரான்கான் சீனா பயணம் மூலம் பீஜிங் செல்லும் முதல் வெளிநாட்டு தலைவர் என்ற பெருமையை பெற்றுள்ளார்.



# வன்முறையை ஒடுக்க ரஷ்ய படைகள் கஜகஸ்தானில் களமிறக்கம்!

கஜகஸ்தானின் ஜனாதிபதியின் வேண்டுகோளுக்கு இணங்க ரஷ்ய தலைமையிலான படைகள் கஜகஸ்தானுக்கு வந்துள்ளன.

அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்கள் மற்றும் வன்முறையை ஒடுக்க அவர் களபணியில் ஈடுபடுவார்கள்.

மிகப்பெரிய நகரமான அல்மாட்டியில் இரவில் கடுமையான துப்பாக்கிச்சூடு நடந்ததாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதனிடையே, ஐ.நா., அமெரிக்கா, பிரித்தானியா மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகள் வன்முறையைத் தவிர்க்குமாறு அனைத்து தரப்பினரையும் கேட்டுக் கொண்டுள்ளன.

அரசாங்கத்திற்கு எதிரான போராட்டங்களின் போது, 3,000க்கும் மேற்பட்டவர்கள் அதிகாரிகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

வன்முறையில் பாதுகாப்புப் படையைச் சேர்ந்த 18பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் 748 பேர் காயமடைந்துள்ளனர்.

ஜனாதிபதி காசிம் ஜோமார்ட் டோகாயேவ் வெள்ளிக்கிழமை நாட்டு மக்களுக்கு உரையாற்றுவார் என்று எதிர் பார்க்கப்படுகிறது என்று அரச தொலைக் காட்சி தெரிவித்துள்ளது.



# சீனாவில் காஸ் சிலிண்டர் வெடித்து கட்டடம் இடிந்து விழுந்து 16 பேர் பலி!

சீனாவில் காஸ் சிலிண்டர் வெடிப்பால் உணவகக் கட்டடம் ஒன்று இடிந்து விழுந்ததில் 16 பேர் பலியாகினர். மேலும் 10 பேர் இடிபாடுகளில் சிக்கி காயமடைந்தனர்.

தென்மேற்கு சீனாவின் சோங்கிங் நகராட்சியின் வுலோங் மாவட்டத்தில் உள்ள உணவகத்தில் வெள்ளிக்கிழமை காஸ் கசிவால் வெடிவிபத்து ஏற்பட்டது. இதனையடுத்து கட்டடம் இடிந்து விழுந்ததில் அதற்குள் 26 பேர் சிக்கிக்கொண்டனர்.

நேற்று நள்ளிரவு நிலைவரப்படி, இடிபாடுகளுக்குள் சிக்கி பாதிக்கப்பட்ட அனைவரும் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

வெடிப்பு நடந்தபோது உணவகத்தில் பலர் மதிய உணவைச் சாப்பிட்டுக்கொண்டிருந்தனர் என சம்பவ இடத்தில் இருந்தவர்கள் தெரிவித்தனர்.

இந்த விபத்துக்கான காரணம் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

# புதிய கொரோனா விதிமுறைகள் வெளியாகின சர்வதேச பயணிகளுக்கு கூடுதல் கட்டுப்பாடுகள்



இந்தியாவில் கொரோனாப் பாதிப்பு மற்றும் ஒமிக்ரோன் பாதிப்பு அதிவேகத்தில் உயர்ந்துவருகிறது. குறிப்பாக, கடந்த ஒரு வாரத்தில் கொரோனாப் பாதிப்பு எண்ணிக்கை திடீரென மிக வேகமாக உயர்ந்துள்ளது. இதன்படி, ஒரு லட்சத்திற்கும் கூடுதலான நோயாளர்கள் நேற்றுப் பதிவாகி அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்தியா முழுவதும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டு, கட்டுப்பாடுகளும் கடுமையாக்கப்பட்டுள்ளன. வெளிநாடுகளில் இருந்து வரும் பயணிகளுக்கான கட்டுப்பாடுகளையும் இந்திய அரசு இறுக்கமாக்கியுள்ளது.

இதன்படி, அனைத்து சர்வதேச பயணிகளுக்கும் 7 நாட்கள் வீட்டுத் தனிமை கட்டாயம் என இந்திய மத்திய அரசு புதிய உத்தரவு ஒன்றை நேற்றுப் பிறப்பித்து, புதிய கொரோனா வழிகாட்டு நெறிமுறைகளை வெளியிட்டுள்ளது.

இதேபோன்று, இந்தியாவுக்கு வருகை தரும் ஆபத்து நிலையிலான நாடுகள் பற்றிய பட்டியலும் இந்திய அரசினால் வெளியிடப்பட்டுள்ளது. குறித்த நாடுகளை சேர்ந்த பயணிகள், இந்தியாவுக்கு வந்த பின்னர் மேற்கொள்ளும் பரிசோதனைகள் உட்படக் கூடுதல் நடவடிக்கைகளைப் பின்பற்ற வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்த புதிய கொரோனா வழிகாட்டு நெறிமுறைகள் வருகிற 11 ஆம் திகதி முதல் அடுத்த உத்தரவு வரும்வரை அமலில் இருக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நாடுகளுக்கான பட்டியலில் இங்கிலாந்து உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளும். தென்னாபிரிக்கா, பிரேசில், போட்ஸ்வானா, சீனா, கானா, மொரீசியஸ், நியூசிலாந்து, சிம்பாப்வே, தான்சானியா, ஹொங்ஹொங், இஸ்ரேல், கொங்கோ, எத்தியோப்பியா, கசகஸ்தான், கென்யா, நைஜீரியா, துனீசியா மற்றும் சாம்பியா ஆகிய 18 நாடுகளும் இடம்பெற்றுள்ளன.

## ஆப்கானிஸ்தானுக்கு மேலும் இரண்டு தொன் மருந்துப் பொருட்களை இந்தியா அனுப்பியது



உள்நாட்டுபோரினால்கடுமையாகபாதிக்கப்பட்டுள்ளஆப்கானிஸ்தானில், தற்போது கடும் நிதி மற்றும் உணவு பொருள்களுக்கான நெருக்கடியைஎதிர்கொண்டுள்ளது. தலிபான்கள் ஆட்சியைக் கைப்பற்றிய பிறகு பல கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளமையால், அங்கிருந்து மக்கள் வெளியேறி வருகின்றன என செய்திகள் தெரிவிக்கின்றன. ஆப்கானிஸ்தானில் தலிபான் அரசை இதுவரை எந்த நாடும் அங்கீகரிக்காத நிலையில் மனிதாபிமான அடிப்படையிலான உதவிகள் மட்டும் சில நாடுகளால் வழங்கப்படுகின்றன.

ஆப்கான் மக்களுக்கு மனிதநேய அடிப்படையில் இந்திய அரசும் மருந்துகள் உள்ளிட்ட மருத்துவ பொருள்களை அனுப்பி வருகிறது. கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் 1.6 தொன் உயிர்காக்கும் மருந்துப் பொருட்களும், ஜனவரி முதலாம் திகதி 5 லட்சம் டோஸ்கள் கோவாக்சின் தடுப்பூசிகளும் அனுப்பி வைக்கப்பட்டன.

தற்போது மூன்றாவது கட்டமாக 2 தொன் உயிர்காக்கும் மருந்துப்பொருட்கள் ஆப்கானிஸ்தானுக்கு அனுப்பப்பட்டுள்ளன. காபூலில் உள்ள இந்திரா காந்தி மருத்துவமனையில் இந்தப் பொருள்கள் ஒப்படைக்கப்பட்டதாக இந்திய வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

வரும் வாரங்களில் கூடுதல் உதவிப்பொருட்கள், மருந்துகள், உணவு தானியங்கள் அனுப்பி வைக்கப்படும் எனவும் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் கூறி உள்ளது.

## பஞ்சாப்பில் பிரதமருக்கு பாதுகாப்புச் சிக்கல் கிண்டல் செய்து எதிர்க்கட்சிகள் கருத்து பகிர்வு



இந்தியப் பிரதமர் மோடி பஞ்சாப்புக்குச் சென்றபோது விவசாயிகள் சாலை மறியலில் ஈடுபட்டமையால், பிரதமரின் வாகனமும் பாதுகாப்பு வாகனங்களும் மேம்பாலத்தில் 20 நிமிடங்களுக்கும் மேல் நிறுத்தப்பட்டன. இதனால், அங்கு பரபரப்பும் பதற்றமான சூழலும் ஏற்பட்டன. இதையடுத்து பாதுகாப்பு கருதி பிரதமரின் நிகழ்ச்சிகள் ரத்துச் செய்யப்பட்டு அவர் அங்கிருந்து டெல்லி திரும்பியிருந்தார்.


பிரதமருக்கான பாதுகாப்பில் குறைபாடு இருந்ததாக பா.ஜ. க.வினர் தொடர்ந்து குற்றம் சாட்டிவருகின்றனர். பஞ்சாப் அரசு திட்டமிட்டே அலட்சியமாக செயல்பட்டதாகவும், பிரதமர் மோடியின் உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதாகவும் தெரிவித்து பா.ஜ. க.வினர் போராட்டங்களையும் நடத்திவருகின்றனர்.

இந்த விடயம் குறித்து கருத்துத் தெரிவித்த பஞ்சாப் முதல்வர், பொதுக்கூட்டத்திற்கு போடப்பட்ட இருக்கைகள் காலியாக இருந்ததாலும், ஆள்களே வரவில்லை என்பதாலும் பிரதமர் திரும்பிச் சென்றதாகத் தெரிவிக்க, அது விவாதப்பொருளாக மாறியுள்ளது.

மோடிக்கான பாதுகாப்பு குறைபாடு குறித்த குற்றச்சாட்டை கிண்டலடிக்கும் வகையில், சமாஜ்வாடி கட்சி தலைவர் அகிலேஷ் யாதவ்வும் கருத்துப் பகிர்ந்துள்ளார். பஞ்சாப் மக்களும் விவசாயிகளும் பிரதமரை அவர் பேசவிருந்த பொதுக்கூட்ட மேடைக்கு வர அனுமதித்திருக்க வேண்டும். அவர் காலியாகக் கிடக்கும் இருக்கைகளைப்பார்த்துஉணர்ந்திருப்பார். உத்தர பிரதேசத்திலும் அவரது கூட்டங்களில் இருக்கைகள் காலியாக இருந்ததுபோல், பெரோஸ்பூர் கூட்டத்திலும் காலியாக இருக்கைகளைப் பார்த்து அவர் உரையாற்றியிருக்க வேண்டும்.

ஜார்க்கண்ட் மாநிலம் கோடர்மாவில் எனது கட்சிக் கூட்டத்திற்கு போதிய மக்கள் வராததால், தொண்டர்கள் என்னை நான்கு மணி நேரம் பேசவிடாமல் தடுத்து வைத்தனர். ஆனால், நான் 25 பேர் மட்டுமே இருந்த நிலையில் பேசிவிட்டு வந்தேன். அதனால்தான் சொல்கிறேன், பிரதமர் காலியாக இருந்த மேடையும் காலியாகக் கிடந்த நாற்காலி களையும் பார்க்க விவசாயிகள் அனுமதித்திருக்க வேண்டும், என்று அவர் தெரிவித்திருக்கிறார். பஞ்சாபில் விரைவில் சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெற உள்ள நிலையில், இந்தியப் பிரதமரின் பாதுகாப்பு தொடர்பான பிரச்சினை பஞ்சாப் மாநில அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## இந்தியா முழுவதும் 5 நாள்களில் 1.5 கோடி சிறார்களுக்கு தடுப்பூசி வழக்கப்பட்டதாக பிரதமர் மோடி பெருமிதம்



கொல்கத்தாவில் சித்த ரஞ்சன் தேசிய புற்று நோய் நிறுவனத்தின் இரண்டாவது வளாகம் 530 கோடி ரூபா மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளது.

இந்தியப் பிரதமர் மோடி காணொளிக்காட்சி மூலம் இதைத் திறந்து வைத்தார். விழா வில் மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர் ஜியும் கலந்து கொண்டார்.


இந்த நிகழ்ச்சியின்போது உரையாற்றிய இந்தியப்பிரதமர் மோடி, கொரோனா தடுப்பூசி போடுவதற்கு தகுதியுள்ள மொத்த மக்கள் தொகையில், 90 சதவீதத்திற்கும் அதிகமானோர் குறைந்தபட்சம் ஒரு டோஸ் தடுப்பூசியையாவது பெற்றுள்ளனர்.

தற்போது, முதல் ஐந்தே நாட்களில் 15 முதல் 17 வயதுக்கு உள்பட்ட 1.5 கோடி சிறுவர்களுக்கு கொரோனா தடுப்பூசியின் முதல் டோஸ் கொடுக்கப்பட்டுள்ளது.

நாட்டின் உள்ள மூத்த குடிமக்களின் முழங்கால் மாற்று சிகிச்சைக்கான செலவையும் இந்திய மத்திய அரசு குறைத்துள்ளது.

ஆண்டுக்கு 1,500 கோடி குறைப்பானது ஏழை மக்களுக்கு உதவுகிறது என்று தெரிவித்துள்ளார்.

## சென்னை நெடுஞ்சாலையைச் சீரமைக்கும் வரை சுங்கக் கட்டணம் வசூலிக்க கூடாது என ரோஜா மனு



ஆந்திராவில் கடந்த ஒக்ரோபர் மாதம் குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக சித்தூர், கடப்பா, நெல்லூர், அனந்தபுரம் ஆகிய நான்கு மாவட்டங்களில் பலத்த மழை கொட்டித் தீர்த்தது.

இதனால் சாலைகள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு சேதமடைந்தன. திருப்பதி- சென்னை தேசிய நெடுஞ்சாலை சேதமடைந்து போக்குவரத்துக்கு பொருத்தமற்ற நிலையில் உள்ளது. அந்த சாலையில் செல்பவர்கள் மிகுந்த சிரமம் அடைந்து வருகின்றனர்.

இந்த நிலையில் நடிகையும், நகரி தொகுதி எம்.எல்.ஏ.யுமான ரோஜா, விஜயவாடாவில் உள்ள தேசிய நெடுஞ்சாலை துறை அதிகாரி கிருஷ்ண பாபுவிடம் மனு ஒன்றை அளித்துள்ளார். சென்னை- திருப்பதி தேசிய நெடுஞ்சாலை மழையில் சேதமடைந்து உள்ளதால் வாகன செலுத்துநர்கள் மிகுந்த சிரமம் அடைந்து வருகின்றனர்.

சாலையைச் சீரமைக்கும் வரை புத்தூர் அருகே அமைக்கப்பட்டுள்ள சுங்க சாவடியில் வாகனங்களுக்கு கட்டணம் வசூலிக்கக் கூடாது. சாலையைச் சீரமைக்க கால தாமதம் செய்தால் பொதுமக்களை கூட்டி தர்ணாவில் ஈடுபடுவோம், என்று அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனுவைப் பெற்றுக்கொண்ட கிருஷ்ண பாபு, விரைவில் சாலையைச் சீரமைத்து தருவதாக உறுதியளித்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# பணியாளரை தாக்கியமைக்கு நீதி கோரி பெரும் போராட்டம்



வாழைச்சேனை பிரதேச சபையின் சுகாதார பணியாளர் ஒருவர் தாக்கப்பட்டதைக் கண்டித்து சபை உத்தியோகத்தர்கள், சுகாதார பணியாளர்கள் ஆகியோர் நேற்று வெள்ளிக்கிழமை பணிப்புறக்கணிப்பு மற்றும் கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வாழைச்சேனை பிரதேச சபை தொழில்நுட்ப உத்தியோகத்தரின் வேண்டுகோளுக்கிணங்க அரச காணியில் தற்காலிக கொட்டகை அமைத்துள்ளதை அகற்றுமாறு சபையின் பணியாளர்களுக்குவிடுத்த வேண்டுகோளின் பிரகாரம் வியாழக்கிழமை கொட்டகையை அகற்றும் போது அக்காணியில் கொட்டகை அமைத்தவர் வருகை தந்து கல்லினால் தாக்குதல் நடத்திய போது பணியாளர் எம்.குமாரவேல் தாக்கப்பட்டு வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந்த நிலையில் வாழைச்சேனை பிரதேச சபையின் பணியாளர் தாக்கப்பட்டுள்ள நிலையில் தாக்கிய நபரை உடனடியாகக் கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்துமாறு கோரி சபை உத்தியோகத்தர்கள், சுகாதார பணியா ளர்கள் ஆகியோர் பணிப்புறக்கணிப்பு மற்றும் கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தாக்கப்பட்ட பணியாளருக்கு நீதி கோரி சபை உத்தியோகத்தர்களால் வாழைச்சேனை பிரதேச சபை தவிசாளர் திருமதி.ஸோபா ஜெயரஞ்சித்திடம் மகஜர் வழங்கப்பட்டதுடன், நீதி கிடைக்கும் வரை போராட்டம் தொடர்வதுடன், பிரதேசத்தில் திண்மக்கழிவுகள் அகற்றும் நடவடிக்கை இடம்பெறாது எனவும் பணியாளர்கள் தெரிவித்தனர்.

பணியாளரை தாக்கிய சந்தேத நபரும் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார் எனவும் வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது பொலிஸரே ஊழியர்கள் மீதான தாக்குதலை கண்டு மௌனம் ஏன், ஊழியரை தாக்கிய குற்றவாளியை கைது செய், நீதி கிடைக்கும் வரை எமது பணிகளில் இருந்து விலகி நிற்கின்றோம், தாக்காதே தாக்காதே ஊருக்குள் பாடுபடும் ஊழியரை தாக்காதே, சுகாதார ஊழியர்களின் பாதுகாப்பை உறுதி செய் என பல்வேறு வாசகங்கள் அடங்கிய பதாதைளுடன் நீதி கோரிய கோசங்களுடன் போராட்டத்தில் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

குறித்த வியடம் தொடர்பில் வாழைச்சேனை பிரதேச சபை தவிசாளர் திருமதி.ஸோபா ஜெயரஞ்சித் வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதுடன், நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகோள் விடுத்திருந்தார்.



## வலத்தாமலை சேந்றுப் பகுதியில் ஆணொருவரின் சடலம் மீட்பு

திருகோணமலை - புல்மோட்டை வலத்தாமலை சேற்றுப் பகுதியில் ஆணொருவரின் சடலமொன்று மீட்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சடலம் நேற்று காலை மீட்கப்பட்டுள்ளது. இவ்வாறு மீட்கப்பட்ட சடலம் புல்மோட்டை பகுதியைச் சேர்ந்த சின்னவன் என்றழைக்கப்படும்ஜெமீல்நிஸ்வர்(21வயது)எனவும்தெரியவருகின்றது.

குறித்த பிரதேசத்தில் உள்ள சேற்றில் சடலமொன்று காணப்படுவதாக வயலுக்குச் சென்ற காவலாளியொருவர் குச்சவெளி பொலிஸ் நிலையத்திற்கு வழங்கிய தகவலையடுத்து இச்சடலம் மீட்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை குறித்த சடலத்தை பார்வையிடுவதற்காக திருகோணமலை நீதிமன்ற பதில் நீதிவான் ஏ.எஸ்.சாஹிர் சம்பவ இடத்துக்கு சென்றதுடன் இந்தச் சடலத்தை திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு கொண்டு சென்று பிரேத பரிசோதனையை முன்னெடுக்குமாறு கட்டளையிட்டார்.

தனது கணவருக்கு பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தாக பொலிஸார் கைது செய்வதற்கு வீட்டுக்கு வந்ததாகவும் இதேவேளை அவர் தப்பி ஓடியதாகவும் இதனையடுத்து நானும் கணவரும் பஸ்ஸில் வந்து கொண்டிருந்தபோது யான் ஓயா பாலத்தை அண்மித்த பகுதியில் பஸ்ஸை மறைத்து தனது கணவரை பொலிஸார் கைது செய்ய முற்பட்டார் எனவும் இதனையடுத்து கணவர் தப்பி ஓடினர் எனவும் நீதிவான் முன்னிலையில் மனைவி தெரிவித்தார்.

அத்துடன் தன்னை வாகனத்தில் ஏற்றிச் சென்று திரியாய் சந்தியில் வைத்தியசாலைக்கு அருகில் இறக்கிவிட்டு கணவர் வீட்டுக்கு வருவார் என பொலிஸார் கூறியதாகவும், இதேவேளை தனக்கு அருகில் நின்ற பொலிஸாரின் உடையில் சேறு இருந்ததாகவும் இதனால் தனது கணவரை பொலிஸார் துரத்தி சென்றமையினாலேயே சேற்றில் சிக்குண்டு உயிரிழந்திருக்கலாம் எனவும் மனைவி நீதிவான் முன்னிலையில் சந்தேகத்தை வெளிப்படுத்தியிருந்தார்.

அத்துடன் இந்த சடலத்தை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்த நீதவான் உத்தரவிட்டதுடன் புல்மோட்டை பொலிஸ் நிலையத்தினால் விசாரணைகளை முன்னெடுக்குமாறு திருகோணமலை மாவட்டத்திற்கு பொறுப்பான பொலிஸ் உயர் அதிகாரி தெரிவித்துள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் தற்போது திருகோணமலை பொது வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

## தமிழில் உரையாற்ற முடியாதமைக்கு நான் மிகவும் மனம் வருந்துகின்றேன்!

### கல்முனையில் டலஸ் தெரிவிப்பு

தமிழில் உரையாற்ற முடியாதமைக்கு வருந்துகின்றேன். அதுமட்டுல்ல வெட்கமும் படுகின்றேன். தமிழில் பேசமுடியாமைக்கு நானோ அல்லது என் பெற்றோர்களோ அல்லது எனது ஆசிரியர்களோ காரணமல்லர். சுதந்ததிரத்திற்குப்பின் வந்த கொள்கை வகுப்பாளர்களே இதற்கான முழுப்பொறுப்பையும் ஏற்க வேண்டும் என வெகுசன ஊடகத்துறை அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

இலங்கை சுதந்திரம் பெற்ற போது 1948 ஆம் ஆண்டு சுதந்திர சதுக்கத்தில் வைத்து உரையாற்றிய டி.எஸ்.சேன நாயக சகோதர தமிழ் மொழியையும் தேசிய மொழியாகப் பிரகடனப்படுத்தியிருந்தால் 30 வருட கால கொடூர யுத்தத்தத்தையும் தவிர்த்திருக்கலாம். இருப்பினும் இப்போது கடந்த வரலாறுகளைப்பேசி ஒன்றும் ஆகப் போவதில்லை எனவும் குறிப்பிட்டார்.

கல்முனை முஹ்யித்தீன் ஜும்ஆப் பெரிய பள்ளிவாசல் மற்றும் கடற்கரை பள்ளிவாசல் நாஹூர் ஆண்டகை தர்ஹா ரீபின் தலைவர் டாக்டர் எஸ்.எம்.ஏ .அஸீஸ் தலைமையில் இடம்பெற்ற 200 ஆவது கொடியேற்ற விழாவை யொட்டி முத்திரை வெளியிட்டுவைக்கும் நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

நான் அரசியல் வாதியாக முதன் முதலில் கிழக்கு மாகாணத்துக்கு வருகை தந்தது நாட்டில் கொழும்பு உட்பட வடக்கு, கிழக்கில் யுத்தம் தீவிரமடைந்திருந்த 2005 ஆண்டு காலப்பகுதியில் ஜனாதிபதி தேர்தல் பிரசாரத்துக்காக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவோடு அக்கரைப்பற்றுக்கு வந்தது தான்.

அப்போது அரசியல் வாதிகளும் முப்படைத் தளபதிகளும் பங்கர்களில் பதுங்கியிருந்த காலம். அப்போது மஹிந்த அக்கரைப்பற்றில் வைத்து மக்களுக்கு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து நாட்டில் சமாதானத்தைக் கொண்டு வருவதாக வாக்குறுதியளித்து அதை நிறைவேற்றியும் காட்டினார். சுதந்திரத்திற்குப் பின் ஆட்சிக்கு வந்த சகல கட்சிகளும் இனவாதத்தையும் மதவாதத்தையும் விதைத்தே ஆட்சிக்கு வந்தன. இதன் விளைவு இதற்கான வட்டியையே நாம் இப்போதும் செலுத் திக் கொண்டிருக்கின்றோம்.



கடற்கரைப்பள்ளி என்பது இந்த மாவட்டத்துக்கு மட்டுமல்ல முழு தேசத்திற்கும் ஒரு புண்ணிய பூமியாகும். இந்த பிரதேசத்துக்கு சகல இன மக்களும் வந்து செல்கிறார்கள். இன ஐக்கியத்தை உருவாக்குவதில் இப்புனித பூமி ஒரு மத்திய ஸ்தானமாகும். இதனை புனித பூமியாக மாற்றித்தருமாறு இங்கு கோரிக்கை விடுக்கப்பட்டது. இந்த விடயம் நிச்சயமாக ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரது கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும். மக்கா வெற்றி பற்றி நான் படித்திருக்கின்றேன்.

அந்த வெற்றியின் பின் முஹம்மத் நபியவர்கள் கூறிய வார்த்தைகளை இங்கு ஞாபகப்படுத்த விரும்புகின்றேன். உலகி லுள்ள அனைத்து உயிர்களும் மதிக்கப்பட வேண்டும். ஏற்றத் தாழ்வுகள் கிடையாது. ஏற்றத்தாழ்வுகளை கால்களுக்குக்கீழ் போட்டு மிதித்தார்கள் நபியவர்கள். எனவே இந்த செய்தி உலகிற்கே முக்கியமான செய்தியாகும்.

உங்களது நாடாளுமன்ற உறுப்பி னரான ஹரீஸ் துடிப்புள்ள மார்க்கப் பற்றுள்ள ஒரு நாடாளுமன்ற உறுப்பினர். உங்களது பிரச்சி னைகள், தேவைகள் பற்றி தியவன்னாவில் உரத்துப் பேசுகின்றார். இவரும் முன்னாள் அமைச்சர் தேசிய காங்கிரஸ் தலைவர் ஏ.எல்.எம். அதாவுல்லாவும் எங்களோடு இணைந்து பயணிப்பது எங்களுக்கு மிகவும் சந்தோமளிக்கின்றது. - எனவும் தெரிவித்தார்.

# எமக்குக் கிடைக்கின்ற சந்தர்ப்பங்களை சரியாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும்

## டக்ளஸ் திட்டவட்டம்





தேசியவேலைத்திட்டங்கள்அனைத்திலும் நாட்டின் அனைத்துப் பகுதிகளும் எந்தப் பாகுபாடுகளுமின்றி உள்ளீர்க்கப்படுகின்றனஎன்பதைவெளிப்படுத்தும் வகையில்தேசிய பாடசாலை திட்டத்திலும் வடக்கு மாகாணத்தை சேர்ந்த சுமார் 51 பாடசாலைகள் உள்ளீர்க்கப்பட்டுள்ளன என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

பளை மத்திய கல்லூரியை தேசிய பாடசாலையாக அங்குரார்ப்பணம் செய்யும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதியின் நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு வேலைத் திட்டத்துக்கு அமைய 1000 பாடசாலைகளை தேசியப் பாடசாலைகளாக மாற்றும் நிகழ்வு நேற்று நாடளாவிய ரீதியில் இடம்பெற்ற நிலையில் வடக்கு மாகாணத்தில் பளை மத்திய கல்லூரியில் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்–

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரின் நாட்டைக் கட்டியெழுப்பும் தேசிய வேலைத் திட்டத்துக்கு அமைய வடக்கு மாகாணத்தில் இதுவரை காலமும் மாகாணப் பாடசாலைகளாக இருந்த 51 பாடசாலைகள் தேசிய பாடசாலைகளாக மாற்றப்பட்டிருக்கின்றன.

எனினும் இந்த மாகாணத்தின் அபிவிருத்திக்கும் இந்த மாகாண மக்களின் ஒளிமயமான எதிர்காலத்துக்கும் வலுச்சேர்க்கும் வகையிலேயே அவற்றின் செயற்பாடுகள் அமைந்திருக்கும்.

கிடைக்கின்ற சந்தர்ப்பங்களை எமக்கான சந்தர்ப்பங்களாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அந்தவகையில், தேசிய பாடசாலைகளாக மாற்றப்படுகின்ற எமது பிரதேசத்தைச் சேர்ந்த பாடசாலைகள், தேசிய ரீதியில் பாடசாலைகளுக்கு பகிர்ந்தளிக்கப்படுகின்ற வளங்களை பயன்படுத்தி நகர்ப்புற பாடசாலைகளுக்கு நிகரான பாடசாலைகளாகத் தம்மை வளப்படுத்திக் கொள்ள வேண்டும். இந்தப் பாடசாலையினுள் இன்று நுழைந்த போது, மஹிந்தோதய தொழில்நுட்ப ஆய்வு கூடத்தின் கட்டடம் கண்ணில் தெரிந்தது. அந்த ஆய்வு கூடத்தின் செயற்பாடுகளும் சிறப்பாக இருப்பதை பின்னர் அவதானிக்க கூடியதாக இருந்தது. அந்த ஆய்வு கூடம் கடந்த காலத்தில் எமது ஆட்சியில் கொண்டு வரப்பட்டது என்ற அடிப்படையில் மகிழ்ச்சியாக இருந்தது. அதே போன்று, தற்போதைய அரசாங்கத்தால் நாடளாவிய ரீதியில் எந்தவிதமான பாகுபாடுகளும் இன்றி பகிர்ந்தளிக்கப்படுகின்ற திட்டங்களையும் நாம் சரியான முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். – என்று தெரிவித்தார்.



# யாழ். மாவட்ட இராணுவ தளபதி மாவட்ட செயலரை சந்தித்தார்!

யாழ்ப்பாண மாவட்ட செயலர் க.மகேசனுக்கும் யாழ்ப்பாண மாவட்ட இராணுவக் கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் செனரத்துக்கும் இடையிலான சந்திப்பு மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது .

நேற்று (வெள்ளிக்கிழமை)குறித்த சந்திப்பில் , யாழ் . மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர்(காணி) எஸ்.முரளிதரன் மற்றும் உதவி மாவட்டச் செயலாளர் எஸ்.சி.என்.கமலராஜன் ஆகியோர் கலந்து கொண்டனர் . இந்தச் சந்திப்பில் பொதுவான பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

குறிப்பாக யாழ் . மாவட்டத்தில் இராணுவத்தினரால் மக்களின் முன்னேற்றம் கருதி பல்வேறுபட்ட அபிவிருத்திப் பணிகள் மற்றும் கொரோனா இடர்காலத்தில் மக்கள் நலனுக்காக இணைந்து செயற்பட்டமைக்காக மாவட்ட அரசாங்க அதிபர் தனது பாராட்டுக்களையும் நன்றிகளையும் தெரிவித்தார்.

மேலும் , விவசாய நடவடிக்கைகளில் சேதனப்பசளை உற்பத்தி நடவடிக்கைகள் , வீதி அபிவிருத்தி, நகர சுத்தப்படுத்தல்கள், மக்களின் வாழ்வாதார நடவடிக்கைகள் மற்றும் கொரோனா தடுப்பூசி நடவடிக்கைகள் உள்ளிட்ட விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

அத்துடன், மக்களின் முன்னேற்றம் கருதி அபிவிருத்திக்காக தங்களாலான முழுமையான ஒத்துழைப்புக்களை தொடர்ந்து வழங்கத் தயாராக இருப்பதாக யாழ்.மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது

# வவுனியா வைத்தியசாலைக்கு சஜித்தினால் இரத்த சுத்திகரிப்பு தொகுதி வழங்கி வைப்பு!



வவுனியா வைத்தியசாலைக்கு எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவால் இரத்த சுத்திகரிப்பு தொகுதி வழங்கி வைக்கப்பட்டது.

எதிர்க்கட்சித் தலைவரின் வடக்கிற்கான விஜயத்தின் முதற்கட்டமாக நேற்று (வெள்ளிக்கிழமை) வவுனியாவிற்கு வருகை தந்த அவர் ஐக்கிய மக்கள் சக்தியின் ‘மூச்சு’ செயற்திட்டத்தின் ஊடாக வவுனியா வைத்தியசாலைக்கு 24 லட்சம் ரூபா பெறுமதியான இரத்த சுத்திகரிப்பு தொகுதியைக் கையளித்திருந்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியால் அரச வைத்தியசாலைகளுக்கு வழங்கப்பட்டு வரும் மருத்துவ உபகரணத் தொகுதிகளில் 35 ஆவது வைத்தியசாலையாக வவுனியா வைத்தியசாலைக்கு இந்த உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

வவுனியா வைத்தியசாலை பணிப்பாளர் வைத்தியர் க. ராகுலன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான ரிஷாத் பதியுர்தீன், புத்திக பத்திரன, ஐக்கிய மக்கள் சக்தியின் முக்கியஸ்தர் உமா சந்திரபிரகாஸ், வன்னி மாவட்ட அமைப்பாளர்கள், வைத்தியர்கள், தாதியர்கள் உட்பட வைத்தியசாலை உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

இதன்போது எதிர்க்கட்சித் தலைவருக்கு வைத்தியசாலையால் நினைவு சின்னமும் வழங்கப்பட்டது.

# மியன்மாரில் இருந்து அரிசியை இறக்குமதி செய்யத் தீர்மானம்

*அரிசியை மியன்மாரில் இருந்து இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.*

*உடன் அமுலாகும் வகையில் ஒரு லட்சம் மெற்றிக் தொன் அரிசி இவ்வாறு இறக்குமதி செய்யப்படவுள்ளது.*

*இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் வர்த்தக அமைச்சு மற்றும் மியன்மார் அதிகாரிகள் கைச்சாத்திட்டுள்ளனர்.*

*களஞ்சியப்படுத்தி வைப்பதற்காக இந்த அரிசி இறக்குமதி செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.*

# ரூபாவாஹினி கூட்டுத்தாபனத்துக்கு புதிய தலைவர் நியமிக்கப்பட்டுள்ளார்



இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் தலைவராக சொனால குணவர்தன நியமிக்கப்பட்டுள்ளார்.

சொனால குணவர்தன இலங்கை தேசிய நூலகத்தின் தலைவராக முன்னர் கடமையாற்றியவர்.

முன்னாள் தலைவர் ரெஜினோல்ட் குரே இந்த வாரம் பதவியை ராஜினாமா செய்த நிலையிலேயே அவர் தலைவராக நியமிக்கப்பட் டுள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 08.01.2022இல் வெளியிடப்பெற்றது.